மாகாணக்கல்வித் திணைக்கம் - வடக்கு மாகாணம்

இரண்டாம் தவணைப் பரீட்சை - 2023

தமிழ்மொழியும் இலக்கியமும் -I, II

தரம் : 10 நேரம் : 3மணித்தியாலம்

மேலதிகவாசிப்பு 10நிமிடங்கள்

.

➢ **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. “பொதியை வரையினிற் கால் கொண்டு வண்கவிதை” இங்கு **வண்** என்பதன் பொருள்

   1) எளிமை 2) மனம் 3) அழகு 4) கடினம்

2. “கணக்காயர் இல்லாத ஊரும்...” இங்கு **கணக்காயர்** என்பது

   1) கணக்காயர் 2) மூத்தோர் 3) அயலவர் 4) ஆசிரியர்

3. “நீங்கக் காண்பது சேர்த்தவர் பாவம் ....” **பாவம்** என்பதன் எதிர்ச்சொல்

   1) புண்ணியம் 2) நலன் 3) பலாபலன் 4) நன்மை

4. “விதியை நோவர் தம் நண்பரைத் தூற்றுவர்...” என்பதில் **தூற்றுவர்** என்பதன் எதிர்ப்பதம்

   1) நிந்திப்பர் 2) போற்றுவர் 3) பழிப்பர் 4) புகழ்ந்துரைப்பர்

5. மடைத்தலையில் ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் இதில் “**மடைத்தலை**” என்பது

   1) நீர் நிலை 2) ஆறு 3) நீரோடும் வாய்க்கால் 4) மடைதிறந்த குளம்

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6. பின்வருவனவற்றுள் தொடர்பற்ற சொற்களின் இணைவு

   1) புகையிலை - கட்டு 2) கருவாடு - பாடம்
   3) வைக்கோல் - அடுக்கு 4) திறப்பு - கோர்வை

7. தாள் என்ற சினைப்பெயரோடு தொடர்புபடுவது

   1) கமுகு 2) நெல் 3) வாழை 4) கீழ்வரகு

8. “வெரசா” எப்பிரதேசத்து வழக்குச் சொல்

   1) மேற்கு 2) தெற்கு 3) மலையகம் 4) கிழக்கு

7. “மௌஸ்” (Mouse) என்ற கலைச்சொல்லின் தமிழ்வடிவம்

   1) கணினி 2) சுட்டி 3) ஆழி 4) எலி

8. ககரம் K என்னும் ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கும் சொல்

   1) மகன் 2) கணவன் 3) தங்கை 4) தங்கம்

9. “இட்டுக்கெட்டார் எங்கும் இல்லை” என்ற பழமொழியின் கருத்து

   1) உண்மை சொல்லில் கெட்டவர் எங்குமில்லை
   2) ஈகை செய்து கெட்டவர் எங்கும் இல்லை
   3) பொறுமை காத்துக் கெட்டவர் எங்கும் இல்லை
   4) சேமித்து கெட்டவர் எங்கும் இல்லை

10. பகைவர்களின் கொடுமைகளைத் தாங்கிக் கொண்டு இருப்பதைக் குறிக்கும் உவமைத் தொடர்

அ) ஆனைவாய்க் கரும்புபோல 2)எடுப்பார்கைப்பிள்ளை போல்
3) அடிவயிற்றில் இடிவிழுந்தது போல 4) அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல

11. குழந்தைப் பிள்ளைக்கும் குட்டி நாய்க்கும் இடம் கொடுத்தல் கூடாது. ''இடங்கொடுத்தல் ''என்ற மரபுத்தொடரின் பொருள்

1) வசிக்க இடம் கொடுத்தல் 2)எதற்கும் இடம் கொடுத்தல்
2) கண்டிப்பின்றி வளர்த்தல் 4)வறுமை ஏற்படாது காத்தல்

12. பின்வருவனவற்றுள் தெலுங்கு மொழியாக அமையாத சொல்

1. பட்டறை 2. கலப்படம் 3.)கொலுசு 4)துட்டு

13. ''குங்குமம் தரித்த திலகநுதல் மங்கலம் தரும் மாட்சிமையன்றோ'' இங்கு குங்குமம் என்ற சொல்

1. தற்சமம் 2) தற்பவம் 3)தெலுங்கு 4)பிரெஞ்சு

14. பின்வருவனவற்றுள் இரட்டைக் கிளவி

1) சின்னஞ்சிறிய 2) மேடு பள்ளம், 3) சலசல 4) வட்டமேசை

15. பின்வருவனவற்றுள் இணைமொழி அல்லாதது

1) கூடமாட 2)இசகுபிசகு 3) ஈவுஇரக்கம் 4) வெட்டவெளி

16. எண்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா

1) வைரவிழா 2) மணிவிழா 3) அமுதவிழா 4) மரகதவிழா

17. ஆடுகளின் கூட்டம் - மந்தை என்பது போல ஆனைகளின் கூட்டம்

1) நிரை 2) பந்தி 3) வரிசை 4) அணி

18. தேர்செலுத்துபவன் பாகன் போல் கப்பல் செலுத்துபவன்

1) மீகாமன் 2) வலவன் 3) கப்பலோட்டி 4) சாரதி

19. காற்றினால் மரம் சரிந்தது

கீழே விழவில்லை.

இவ்வாக்கியங்களை இதே ஒழுங்கில் இணைக்கப்பயன்படும் இணைப்பிடைச் சொல்

1) ஆனால் 2) ஏனெனில் 3) அதனால் 4) ஆகவே

20. பின்வருவனவற்றுள் பெண்பாலை மாத்திரம் உணர்த்தும் சொல்

1) புத்திசாலி 2) நோயாளி 3) தொழிலாளி 4) செவிலி

❖ **பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. கற்றவனுக்கு உரியது பணிவு. இது எத்தனையாம் வேற்றுமை என்ன பொருளில் வந்துள்ளது?
    1) முதலாம் வேற்றுமை எழுவாய்ப்பொருள் 2) நான்காம் வேற்றுமை தகுதிப் பொருள்
    3) இரண்டாம் வேற்றுமை கொடைப்பொருள் 4) மூன்றாம் வேற்றுமை கருத்தாப் பொருள்

22. திருவள்ளுவர் இந்தியாவில் பிறந்தார். அவர் திருக்குறளை இயற்றினார். இதில் வந்துள்ள மாற்றுப் பெயர்

    1) திருவள்ளுவர் 2) அவர் 3) திருக்குறள் 4) பிறந்தார்

23. பகுபத உறுப்புக்களில் பொருள் உணர்த்தும் உறுப்பு

    1) பகுதி 2) விகுதி 3) சந்தி 4) இடைநிலை

24. பின்வருவனவற்றுள் நிகழ்கால இடைநிலைகள்

    1) கின்று, கிறு 2) ப்,வ் 3) த்,ட் 4) த், ந்

25. வாணியின் கால் விபத்தில் முறிந்தது. இங்கு 'கால்'' என்பது

    1) பொருட்பெயர் 2) இடப்பெயர் 3) சினைப்பெயர் 4) தொழிற்பெயர்

26. பின்வருவனவற்றுள் வினையெச்சம் அல்லாதது.

    1) விளையாடி 2) படித்து 3) நடித்த 4) நடித்து

27. மக்கள் கூட்டம் திரண்டு வந்தனர். இதில் வந்துள்ள வழு

    1) திணைவழு 2) பால் வழு 3) எண்வழு 4) கால வழு

28. முள்+ செடி என்பதைப் புணர்த்தினால்

    1) முட்செடி 2) முள்செடி 3) முடச்செடி 4) முள்ளுச்செடி

❖ **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்தொகுதியைத் தெரிவு செய்க.**

**29.** வினையடை : மெல்ல, அழகாக, ஓடும்

பெயரெச்சம் : பறக்கும், ஓடிய, கற்ற
வினையெச்சம்: நடந்து, பாடி, வணங்கி
ஆக்கப்பெயரடை:அன்புள்ள, நியாயமான, கருமையான

30. ஆக்கப் பெயர் : பயிற்சி, முயற்சி, பல்கலைக்கழகம்

கூட்டுப்பெயர் : புகைவண்டி, வானொலி, எழுதுகருவி
வினையாலணையும் பெயர் : வந்தவன், எழுந்தவன், பெற்றதாயை
தொழிற்பெயர் : ஓடுதல், முடித்தல், நடித்தல்

❖ **புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. ஒரு சொல்லில் இரு பொருள்வரப் பாடுவது ............ என்பர்

1) உவமை 2) உருவகம் 3) தற்குறிப்பேற்றம் 4) சிலேடை

32. சுற்றுலாத்துறையால் நமது நாடு பெருமளவு ................ ஈட்டிக்கொள்கிறது

1) மண்பற்றை 2) கடற்றொழிலை 3) அந்நியச்செலாவணியை 4) இலாபத்தை

33. குறித்த ஒரு நூலினை எழுதியவரால் வழங்கப்படும் உரை............. எனப்படும்.

1) முன்னுரை 2) வாழ்த்துரை 3) விமர்சனம் 4) நயப்புரை

34. வர்த்தக நிறுவனங்கள் தொலைக்காட்சிகளில் இடம்பெறும் பெரும்பாலான கலை நிகழ்வுகளுக்கு…….......................... வழங்குகின்றன.

1) அனுசரணை 2) பணம் 3) விளம்பரம் 4) மானியம்

- பின்வரும் வினாக்களிற்கு பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவு செய்க.

35. எருதும் உழவனும் வயலை .................

1) உழுதது 2) உழுதான் 3) உழுதனர் 4) உழுகின்றன.

36. ஆசிரியர் உத்தரவிட்டாலன்றி அவன் எதையும் ..................

1) செய்கிறான் 2) செய்வான் 3) செய்யான் 4) செய்யார்

❖ **பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

நரை கூடிக் கிழப்பருவம் எய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின் மாயும்
வேடிக்கை மனிதரைப் போலே நான்
வீழ்வேன் என்று நினைத்தாயோ?

37. இக் கவிதை உணர்த்தும் அடிப்படையான பொருள்

1) தற்பெருமை 2) தன்னலம் 3) தன்சரிதை 4) தன்னம்பிக்கை

38. இங்கு ‘‘கூற்றுக்கு இரை’’ என்ற தொடர் குறிப்பது

1) உணவு 2) மரணம் 3) ஜனனம் 4) யமன்

39. ‘‘வீழ்வேன்’’ என்பதன் எதிர்ப்பதம்

1) மாய்வோர் 2) எழேன் 3) எழுவேன் 4) மாயோன்

**40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியொன்றையமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

அ. விபுலானந்தர் இத்துறை முன்னோடிகளில் ஒருவர் எனலாம்.
ஆ. தமிழில் ஆய்வுகள் பல்கிப் பெருகிக் காணப்படுகின்றன.
இ. ஆங்கில இலக்கியத்தை தமிழ் இலக்கியங்களுடன் இணைத்து தோற்றிவித்தார்
ஈ. அவற்றுள் ஒப்பியல் ஆய்வுகளுக்கும் முக்கிய இடமுண்டு.
உ. பின்னாளில் இவ் ஆய்வுத்துறை பெருவளர்ச்சி கண்டது.

1) உ, அ, ஈ, இ, ஆ 2) இ, அ, ஆ, ஈ, உ

3) ஆ, ஈ, அ, இ, உ 4) ஆ, இ, உ, ஈ. அ

**(40 x 1=** 40 **புள்ளிகள்)**

பகுதி - II

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) **சுருக்கமான விடை தருக.**

1. பின்வரும் தொடரை சந்தி பிரித்து எழுதுக.
   கழியும்பிழைபொருட் டள்ளி நன்னூலாங்
2. பின்வரும் பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றி எழுதுக.
   பொழுது விடிஞ்சதும் விடியாததுமாக வயலுக்குப் புறப்பட்டுச் சென்றுவிடுவன்
3. 'அமர்' என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாகத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.
4. பின்வரும் வாக்கியத்தில் பொருத்தமான நிறுத்தற் குறியீடுகளையிட்டு வாக்கியத்தை மீண்டும் எழுதுக.
   என்னடா மச்சான் அழுகிறாய்
5. 'அறை கூவுதல்'' என்ற மரபுத் தொடரின் பொருள் விளங்கத்தக்க வகையில் வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.
6. பின்வரும் வாக்கியத்தை மயக்கம் நீக்கி எழுதுக.
   ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைகள் மற்றும் மனிதாபிமான அமைப்பு
   குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துமாறு அரசைக் கோரியுள்ளது
7. மழை உரிய பருவத்தில் பெய்யாது விடின் விவசாயிகள் பாதிப்படைவர்'' மேற்படி வாக்கியத்தின் எழுவாய் பயனிலையைக் குறிப்பிடுக.
8. நான் தினசரி இணையத்தின் மூலம் பத்திரிகைச் செய்திகளை வாசிக்கின்றேன். இச்செய்வினை வாக்கியத்தை செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.
9. இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு ஒரு தீர்வாவது கிடைக்காதா என மக்கள் ஏங்கித் தவிக்கின்றனர். இவ் வாக்கியத்தில் உள்ள தலைமைத்தொடரை இனங்கண்டு எழுதுக.
10. நளனும் தமயந்தியும் துன்பக் கேணியில் நீந்தினார்கள்.
    அ. இங்கு இடம்பெற்றுள்ள அணி யாது?
    ஆ. அதனை விளக்கு.

**(10x2=20 புள்ளிகள்)**

02) **பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக நீர் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலைப்பிடுக.**

அ) நாட்டில் தொடரும் கடும் வரட்சியான காலநிலை காரணமாக குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. இதனால் குடிநீரானது பொருளாதாரப் பண்டமாக மாறிவருகின்ற அபாயநிலை காணப்படுகின்றது. அதேவேளை நன்னீரானது அருகிச் செல்வத்தையும் காணமுடிகின்றது. நீர்வளத்தை பேணிப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி கட்டுரை ஒன்று எழுதுக.

ஆ) உலகமயமாதல் காரணமாக மனிதர்களிடையே போட்டியும் சுயநலத் தன்மையும் மேலோங்கிச் செல்லும் போக்குக் காணப்படுகிறது. இதனால் மனித சமுதாயம் சீரழிந்த நிலைக்குச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலை மாறி அன்பு, இரக்கம் முதலிய மனிதநேயப் பண்புகள் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டியதன் அவசியம் பற்றி நீங்கள் நிகழ்த்தும் மேடைப்பேச்சு.

இ) நாட்டில் பரவிய கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட பாதிப்புக்களாலும், அதன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினாலும் வயது. பால், பேதம் இன்றி ஏராளமானவர்கள் நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். இதனால் ஏற்படப் போகின்ற நன்மை, தீமைகளை விளக்கி இருவருக்கிடையில் நடைபெறும் உரையாடல்.

ஈ) இளவயதிலேயே தனது கணவனை இழந்து விட்ட நிலையில் தனி மரமாக நின்றவள்தான் கண்மணி. இறைவன் அவளுக்கென்று கொடுத்த ஒரேயொரு சொத்து அவளுடைய மகள். தன் மகளை கல்வியில் மிக உயர்நிலைக்கு ஏற்றி விட்ட பெருமிதத்தில் கடந்த காலத்தை ஒரு முறை திரும்பிப் பார்க்கின்றாள். அவள் பட்ட துன்பங்கள், அவமானங்கள், அவள் கண்முன்னே நிழலாடுகின்றன................ இதனைத் தொடர்ந்து கற்பனைச் சிறுகதை.

**(25 புள்ளிகள்)**

**03) கீழே தரப்பட்ட உரைப் பகுதியின் சுருக்கத்தை 40 -45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.**

சமூகங்களில் மனிதாபிமானமற்ற செயல்கள் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மனித வரலாறு தொடங்கிய காலகட்டங்களில் நாகரிகம் குறைந்த மனிதர்கள் இருந்திருக்கலாம். ஆனால் மனிதப் பண்பாடுகள் நிறையப் பெற்றிருந்தனர். நாகரிகம் என்று இங்கு குறிப்பிடப்படுவது மனிதகுலம் அடைந்த உலகியல் சார்ந்த வாழ்க்கை வசதிகள் வாழ்க்கை முன்னேற்றங்கள் என்பவற்றை உள்ளடக்கிய நிலைமைகளையேயாகும். இன்றைய மனிதர்கள் மிகக் குறைந்த அளவு வாழ்க்கை வசதிகளையே கொண்டிருந்தனர். உணவு, உடை, என்பவற்றில் இன்று போல் அன்று அபிவிருத்தி பெற்றிருக்கவில்லை என்பது உண்மையே. ஆனால் விசாலமான மனங்களைப் பெற்றிருந்தனர். மனிதாபிமானம், மனித தர்மம், வாழ்க்கை அறங்கள் என்பவற்றில் பெரிதும் முன்னேற்றம் கண்டிருந்தனர். சான்றாண்மையைப் போற்றி வாழ்க்கையிலும் கடைப்பிடித்தனர். சுருங்கக் கூறினால். அன்றைய மனிதர் மனிதப் பண்பாட்டில் உயர்ந்து விளங்கினர்.

பண்பாடு என்பது அகம் சார்ந்தது. மனிதரிடம் உள்ளார்ந்து காணப்படுகின்ற உணர்வுகள், எண்ணங்கள், பண்படுத்தப்பட்டு தூய்மைப்படுத்தப்பட்டு வெளிப்பாடாகும் போது பண்பாடு தோன்றுகின்றது. உள்ளங்களில் ஊற்றெடுத்து வெளிப்படுவதால் மனிதப் பண்பாடு வெளிப்படுதல் என்றால் ஒழுக்கத்தின் மூலமே அதனைக் காணமுடிகிறது. பேச்சிலும் செயலிலும் பண்பாடு துலங்கும் போதுதான் அதனை மதிப்பீடு செய்ய முடியும். நல்ல பண்பாடு உடையவர்கள் பண்பாடு இல்லாதவர்கள் என மக்களைப் பாகுபாடு செய்து மதிப்பிடுவதற்கு அளவு கோலாக உள்ளது ஒழுக்கம் ஆகும்.

**(10 புள்ளிகள்)**

04) **பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ்த்தருப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

அழகியற் கலைகளுக்குள்ளே இசையும் ஓவியமும் இலக்கியமும் ஆற்றல் மிக்கவையெனக் கருதப்படுகின்றன. இவற்றுள்ளும் இலக்கியக் கலையானது இசை,ஓவியம் என்னும் இரண்டிலும் ஆற்றல் மிக்கது. இலக்கியத்தின் வகைகள் எண்ணற்றவை. மனித அனுபவத்தின் எல்லாக் கூறுகளையும் இலக்கியம் எடுத்துக் காட்டுகின்றது. மனித இயல்புகளின் எல்லாப் பகுதிகளுக்கும் அது திருப்தியளிக்கின்றது. அவல நாடகங்கள் உள்ளத்தை உருக்கி உயர்வுபடுத்தும். நகைச்சுவை நாடகங்கள் மகிழ்ச்சியை நல்கும். அங்கத இலக்கியங்கள் மனித இனத்தின் மடமைகளையும், கொடுமைகளையும் எடுத்துக்காட்டி சினமூட்டி நீதிக்காக வாதாடும் நேர்மைத்திறத்தை நல்கும். உயர்ந்த கற்பனை வளமுடைய காவியங்கள் இப்பொழுது நாம் காணும் உலகத்தை இலட்சிய உலகமாக்கி, நமது இதயத்தின் தேடல்களை எய்துவதற்கு ஊக்கமளிக்கும். இலக்கியப்புவலர்கள் படைக்கும் பாத்திரங்கள் பலவிதமானவை. பல்வேறு குணவியல்புகளை இனங்கண்டு கொள்ளலாம். நம் உள்ளத்தில் அடக்கி வைக்கப்பட்டிருக்கும் உணர்ச்சிகளை இப்பாத்திரங்களிலே ஏற்றிவிடலாம். இவ்வாறு செய்வதால் நமக்கு ஒருவித விடுதலை இன்பம் வாய்க்கின்றது.

1. ஆற்றல் மிக்க அழகியற் கலைகளாகக் கருதப்படுபவை எவை?
2. இலக்கியங்களின் சிறப்பம்சங்கள் இரண்டினைத் தருக.
3. உள்ளத்தை உருக்கி உயர்வுபடுத்துபவை எவை?
4. காவியங்களால் ஊக்கம் பெறுபவை எவை?
5. எப்பொழுது விடுதலை இன்பம் வாய்க்கப் பெறுகின்றது.

**(5x 2= 10 புள்ளிகள்)**

05) இன்று நூல் வாசிப்பானது மிகவும் அருகிச் செல்கிறது. அதனை மீட்டெடுக்கும் பொருட்டு நீர் வசிக்கும் கிராமத்தில் பயன்பாடற்றுக் கிடக்கும் நூல் நிலையம் ஒன்றினை மீள் பயன்பாட்டிற்காக புனரமைப்புச் செய்து தருமாறு கோரி உமது பிரதேச செயலருக்கு 100 சொற்களில் அமையுமாறு கடிதம் எழுதுக.

**அல்லது**

இன்று சிறுவர்களை துஸ்பிரயோகம் செய்யும் நடவடிக்கையில் வளர்ந்தோர் ஈடுபட்டு வருகின்றனர். இதிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்காகப் பெற்றோர் விழிப்பாயிருப்பது அவசியமாகின்றது. இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டுப்பிரசுரம் எழுதுக.

**(15 புள்ளிகள்)**